| O.S.No. 04/2020 | DW1: திரு. நாகேஷ்<br>த/பெ. திரு. சின்னபையன் | 13-07-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வழக்கு சொத்து புதூர் மற்றும் பனைமுகை கிராமங்களில் உள்ளது. நான் வெளியூரில் வசிக்கிறேன். தாவா சொத்துக்கள் நிலம் மற்றும் வீட்டுமனை ஆகும். புதூரில் வீட்டு மனையும், நிலமானது புதூர் மற்றும் பனைமுகை கிராமங்களில் உள்ளது. சுவாதீனம் வேண்டி தாக்கல் செய்த மனுவில் தவறாக ஊர் குறிப்பிடப்பட்டதால் சுவாதீனம் எடுக்க முடியவில்லை என்றும், அதனை திருத்த மனு தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த திருத்தல் மனுவின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்துக்களுக்கான பட்டா எனது தாத்தா ஜில்பா பெயரில் உள்ளது.

2. தாவா சொத்துக்களுக்கான பட்டா தற்போது வாதியின் தந்தை நாகப்பன் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கான வா.சா.ஆ.2 பட்டா வாதியின் தந்தை பெயரில் உள்ளது என்றால் அது வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் ஆகும். வா.சா.ஆ.2 வாதியின் தந்தை பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு எனது பெயரில் பட்டா இல்லை. கம்ப்யூட்டரில் தாவா சொத்துக்களுக்காக பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்று பார்த்தீர்களா என்றால் இல்லை. தாவா சொத்துக்களுக்கான வா.சா.ஆ.3 அடங்கலும் தற்போது வரை வாதியின் தந்தை நாகப்பன் பெயரிலேயே வழங்கப்பட்டு வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

3. தாவா சொத்துக்கு வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 வாய்தா ரசீதுகள் வாதியின் தந்தை பெயரிலேயே வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் தாவா சொத்துக்களுக்கான பட்டா நாகப்பபன் பெயரில் மாற்றப்பட்டுள்ளது. 1988–க்கு பின்னிட்டு சோமு அவரது பெயரில் குடிநீர் குழாய் வரி ரசீது கட்டியிருக்கலாம். தாவா சொத்துக்காகன வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 வீட்டு வரி ரசீதுகள் சோமு

பெயரிலேயே உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் 17.09.1980 – ல் வாதியின் தகப்பனார் நாகப்பன் கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சுவாதீனம் கேட்டு தாக்கல் செய்த பி.சா.ஆ.1 வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் மேற்க்கொண்டு தரப்பினர்களை சேர்க்கவேண்டி மனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்துக்களை வாதிக்கு அவரது தந்தை நாகப்பன் 2017–ல் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ள விஷயம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. நிறைவேற்று மனுவில் வில்லங்க சான்று ஏதேனும் பெற்று தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எனக்கு வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தற்போது சோமுவின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். அதனால், வாதியின் வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

ஒம்/– நாகேஷ்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.07.13 11:56:55 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**